www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore

## சுராவின்

# தமிழ் உரைநூல்

## மேல்நிலை - முதலாம் ஆண்டு

தமிழ்நாடு அரசு (13–8–2021) G.O. (Ms). No. 126) அன்று வெளியிட்டுள்ள குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடத்திட்டத்தின்படி பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, கூடுதல் வினா விடைகள். மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018 (அ.மா.வி.), முதல் பருவ இடைத்தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2018 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020, செப். 2020 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- சுராவின் மாதிரி வினாத்தாள் 2021 (குறைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி) இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

**2021-22** பதிப்பு

© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-5330-436-2**

**குறியீட்டு எண் : SG 145**

***எழுதி வழங்கியவர்கள்***

**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**கவிஞர். மாத்தூர். அ.ச. சேகர்,** M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

☎ 91-44-4862 9977, 486 27755

81242 01000/ 81243 01000

வாட்ஸ்அப்: 8124201000

**e-mail :** orders@surabooks.com,

**website :** www.surabooks.com

- **சுராவின் தமிழ் உரைநூல்**
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

**எங்கள் வாழ்த்திற்குரிய இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** மேல்நிலை – முதலாம் ஆண்டு வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம் ஆகியவை தரப்பட்டுள்ளன. கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது. இறையருளை வேண்டுகிறோம்!***

**நலமே விளைக! . . .** - பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore

# பொருளடக்கம்



| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் | 1-2 |
| 1. | மொழி **என்னுயிர் என்பேன்** | யுகத்தின் பாடல் **(செய்யுள்)** | 3-25 |
| | | பேச்சுமொழியும் கவிதை மொழியும் **(உரைநடை)** | |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் **(இலக்கணம்)** | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் **மாமழை போற்றுதும்** | ஏதிலிக்குருவிகள் **(செய்யுள்)** | 26-52 |
| | | காவியம் **(செய்யுள்)** | |
| | | திருமலை முருகன் பள்ளு **(செய்யுள்)** | |
| | | யானை டாக்டர் **(துணைப்பாடம்)** | |
| | | புணர்ச்சி விதிகள் **(இலக்கணம்)** | |
| 3. | பண்பாடு **பீடு பெற நில்** | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு **(உரைநடை)** | 53-80 |
| | | புறநானூறு **(செய்யுள்)** | |
| | | வாடிவாசல் **(துணைப்பாடம்)** | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| 4. | கல்வி **கேடில் விழுச்செல்வம்** | இதழாளர் பாரதி **(துணைப்பாடம்)** | 81-82 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் **நாளெல்லாம் வினைசெய்** | சீறாப்புராணம் **(செய்யுள்)** | 83-100 |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **பல்கலை நிறுவு** | குற்றாலக் குறவஞ்சி **(செய்யுள்)** | 101-122 |
| | | திருச்சாழல் **(செய்யுள்)** | |
| | | இசைத்தமிழர் இருவர் **(துணைப்பாடம்)** | |
| | | கலைச்சொல்லாக்கம் **(இலக்கணம்)** | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **வையத் தலைமை கொள்** | காற்றில் கலந்த பேரோசை **(உரைநடை)** | 123-147 |
| | | புரட்சிக்கவி **(செய்யுள்)** | |
| | | ஆக்கப்பெயர்கள் **(இலக்கணம்)** | |
| 8. | மனிதம், ஆளுமை **யாரையும் மதித்து வாழ்** | மனோன்மணீயம் **(செய்யுள்)** | 148-170 |
| | | செவ்வி **(துணைப்பாடம்)** | |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் **(இலக்கணம்)** | |
| | | மொழித்திறன் பயிற்சிகள்: கொச்சைச் சொற்களை திருத்தி எழுதுதல், வல்லினமெய்களை நீக்கி, இட்டு எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், மரபுச் சொற்களை தொடர் அமைத்து எழுதுதல், விடைக்கேற்ற வினா அமைத்தல், நிறுத்தற்குறிகளை இடுதல், மயங்கொலி சொற்களை தொடரில் அமைத்து எழுதுதல், உவமைதொடரை தொடர் அமைத்து எழுதுதல், பிறமொழிச்சொல், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி – மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | 171-201 |
| | | **சுராவின் மாதிரி வினாத்தாள்** 2021 | 202-203 |



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 80562 94222 / 80562 15222

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : PADI | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : ASIAD COLONY | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
**email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
**1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,**
**Chennai - 600 040.**
**Phones : 044-48629977, 48627755.**
**Mobile : 80562 94222/ 80562 15222.**
**email : orders@surabooks.com Website : www.surabooks.com**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore

# மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

## யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த

அ.மா.வி 2018

காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

**- சு.வில்வரத்தினம்**

---

இயல் - 2

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

**- பிரமிள்**

---

இயல் - 3

## புறநானூறு

செப். 2020

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

**- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

---

இயல் - 3

## திருக்குறள்

**அடக்கமுடைமை**

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. காலாண்டுத் தேர்வு 2019

**ஒப்புரவறிதல்**

4. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.
அரையாண்டுத் தேர்வு 2019

6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.
மு.ப.இடைத்தேர்வு 2018

**புகழ்**

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
காலாண்டுத் தேர்வு 2018

9. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**நிலையாமை**

13. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**துறவு**

15. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

16. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

19. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். அ.மா.வி 2018

20. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



22. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். ஜூன் 2019

## காலமறிதல்

24. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

**இயல் - 5**

**குறிப்பறிதல்**

3. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

**பகைத்திறம் தெளிதல்**

7. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

8. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.
அரையாண்டுத் தேர்வு 2018, மார்ச் 2019

## மருந்து

9. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். செப். 2020

10. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். மார்ச் 2020

## இரவச்சம்

13. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

**- திருவள்ளுவர்**

**இயல் - 7**

## புரட்சிக்கவி

ஜூன் 2019

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம்
எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

**- பாரதிதாசன்**

**பா வகை : எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

★ ★ ★




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி

# யுகத்தின் பாடல்

- சு.வில்வரத்தினம் கவிதைப்பேழை

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 1. என் அம்மை, ஒற்றியெடுத்த<br>நெற்றிமண் அழகே!<br>வழிவழி நினதடி தொழுதவர்,<br>உழுதவர், விதைத்தவர்,<br>வியர்த்தவர்க்கெல்லாம்<br>நிறைமணி தந்தவளே!<br>உனக்குப்<br>பல்லாண்டு<br>பல்லாண்டு<br>பல்லாயிரத்தாண்டு | என் அன்னை பூமித்தாய். பூமித் தாயின் நெற்றி மண் அழகு. பூமித்தாயின் திருவடிகளைக் காலம் காலமாக தொழுகின்றனர். தொழுது வருகின்றனர்.<br>உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் எல்லாருக்கும் நிறைந்த பொருள்களை அள்ளித் தந்தவள் நம் பூமித்தாய்.<br>அவளுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நாம் பல்லாண்டு பாட வேண்டும்.<br>அது போல நம் தமிழ்த்தாய் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை நமக்கு ஏற்பட்ட இடர்களைக் களைந்து உயர் தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கின்றாள். |
| 2. பாடத்தான் வேண்டும்!<br>காற்றிலேறிக்<br>கனைகடலை, நெருப்பாற்றை,<br>மலைமுகடுகளைக் கடந்து<br>செல் எனச் செல்லுமோர் பாடலை<br>கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்<br>காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்<br>உரமெலாம் சேரப்<br>பாடத்தான் வேண்டும்!<br>ஏடு தொடக்கி வைத்து என்னம்மை<br>மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த<br>விரல்முனையைத் தீயிலே தோய்த்து<br>திசைகளின் சுவரெலாம்<br>எழுதத்தான் வேண்டும்<br>எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>- சு.வில்வரத்தினம் | பாடத்தான் வேண்டும்! காற்றில் ஏறி, கனைகடலை, நெருப்பாற்றை மலை முகடுகளைக் கடந்து செல் எனச் செல்லும் ஓர் பாடலை நாம் பாடத்தான் வேண்டும்.<br>கடல் சீற்றத்தால் கபாடபுரங்களை இம் மண் இழந்த போதும் காலத்தால் என்றும் அழியாத தொல் கனிமங்களின் உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும்.<br>ஏடு தொடக்கி வைத்து என் தாய் மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த விரல் முனையைத் தீயிலே தோய்த்து எண் திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும் எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>என் தாய் மண்ணின் பெருமையை எல்லாத் திசைகளிலும் பரவச் செய்ய நாம் தாய் மண்ணின் புகழைப் பல்லாண்டு வாழ்த்துப்பாட வேண்டும். |

**புதுக்கவிதை என்பதன் விளக்கம்:**

- மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனத்தில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
- இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

**நூற்குறிப்பு :**

வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப்பகுதியில் இடம் பெறுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு :**

- கவிஞர் சு. வில்வரத்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில் பிறந்தவர்.
- இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' எனும் தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன.
- இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929
www.surabooks.com

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



**சொல்லும் பொருளும் :**

1. உரம் – வலிமை
2. நிறை – மிகுதி, நிரம்ப
3. முகடு – உச்சி
4. யுகம் – பூமி

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. வழி வழி, தீட்டித் தீட்டி | அடுக்குத்தொடர்கள் |
| 2. தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர், வைத்தார் | வினையாலணையும் பெயர்கள் |
| 3. நிறைமணி | வினைத்தொகை |
| 4. சாகாத | எதிர்மறை பெயரெச்சம் |
| 5. மாநகர், கூர்வேல், உறுமீன் | உரிச்சொற்றொடர்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| | |
|---|---|
| தீட்டி – தீட்டு + இ<br>தீட்டு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | எழுகின்ற – எழு + கின்று + அ<br>எழு – பகுதி<br>கின்று – நிகழ்கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| நின்ற – நில் (ன்) + ற் + அ<br>நில் – பகுதி<br>(ன்) – 'ல்', 'ன்' ஆகத் திரிந்து விகாரம்<br>ற் – இறந்த கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | |

**புணர்ச்சி விதிகள் :**

**உடம்படுமெய்ப் புணர்ச்சி**

1. **ஒற்றியெடுத்த** = ஒற்றி + எடுத்த

   **விதி 1 :** 'இ, ஈ, ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி உடம்படுமெய் பெற்றது. ஒற்றி + ய் + எடுத்த என நிற்கும்.

   **விதி 2 :** 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி ஒற்றி + ய் + எடுத்த (யெ) ஒற்றியெடுத்த என்றானது.

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

1. **பல்லாண்டு** = பல் + ஆண்டு

   **விதி 1 :** 'தனிக் குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' பல்ல்+ஆண்டு என நிற்கும்.

   **விதி 2 :** 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' பல்ல்+ஆண்டு பல்லாண்டு எனப் புணரும்.

2. **காற்றிலேறி** = காற்றில் + ஏறி

   **விதி 1 :** – 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ல்+ஏ = லே காற்றிலேறி எனப் புணரும்.

3. **உரமெலாம்** = உரம் + எலாம்

   **விதி 1 :** – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி நிலைமொழியின் ஈற்று மெய்(ம்)யும் வருமொழியின் முதலெழுத்தான உயிரும் (எ) சேர்ந்து (ம்+எ = மெ) உரமெலாம் எனப் புணரும்.

4. **சுவரெலாம்** = சுவர் + எலாம்

   **விதி 1 :** – 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி. நிலைமொழியின் ஈற்று மெய்(ர)யும் வருமொழியின் முதலெழுத்தான உயிரும் (எ) சேர்ந்து ர்+எ = ரெ) சுவரெலாம் எனப் புணரும்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

**1. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்**
**காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.** காலாண்டுத் தேர்வு 2019

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட

ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாட புரங்களை - காலத்தால்

ஈ) காலத்தால் - சாகாத

**விடை: இ) கபாடபுரங்களை - காலத்தால்**

**குறுவினா**

**1. என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே!**
**வழிவழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே! - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

**வினையாலணையும் பெயர்கள்:**

(i) தொழுதவர்

(ii) உழுதவர்

(iii) விதைத்தவர்

(iv) வியர்த்தவர்.

**2. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.** காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார்.

**சிறுவினா**

**1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?** அரையாண்டுத் தேர்வு 2019

(i) என் அன்னையே! தலை ஒற்றியெடுத்தபோது நெற்றியில் படிந்த மண்ணின் அழகே!

(ii) வழிவழியாக உன் திருவடிகளைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைமணி தந்தவளே! உனக்குப் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்.

(iii) தொன்மையான கபாடபுரம் போன்ற நிலப்பரப்புகளைப் பலி கொண்ட பிறகும் ஒலிக்கின்ற கடலையும், நெருப்பாற்றையும், மலை உச்சிகளையும் காற்றிலே ஏறிக் கடந்து தமிழைச் செல்லுமாறு கட்டளை இடுகின்ற பாடலைப் பாடத்தான் வேண்டும்.

(iv) மேலும் காலத்தால் அழிவில்லாத தொன்மையான செல்வங்களின் வலிமை சேருமாறு பாடத்தான் வேண்டும் என்று கவிஞர் சு. வில்வரத்தினம் தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடுகிறார்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



## கற்பவை கற்றபின்

**1. தாய்மொழியே முதன்மையானது – இக்கூற்றுக் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**சந்தோஷ்** : வணக்கம். அசோக், ஆனந்த், சம்பத் எப்படி இருக்கிறீர்கள்?

**மூவரும்** : வணக்கம். நாங்கள் நலம், நீங்கள்?

**சந்தோஷ்** : நானும் நலம்.

**சம்பத்** : இந்த உலகத்திலே மிகவும் தொன்மையான மொழி எது?

**அசோக்** : அதுவா!... நம்முடைய தாய்மொழி தமிழ்தான்.

**ஆனந்த்** : எந்த மொழியில் கல்வி கற்க சுலபம்.

**சந்தோஷ்** : நம்முடைய தாய்மொழியில்தான்.

**சம்பத்** : ஏன்?

**அசோக்** : ஏனென்றால், தாய்மொழியில் கல்வி கற்றால் எளிதில் புரிந்து கொண்டு வெற்றிப் பெற முடியும் பிறமொழியில் கல்வி கற்றால் புரியாது, கடினமாக இருக்கும், வெற்றி என்பது கேள்விக்குறியே!...

**ஆனந்த்** : அப்படியா!...

**சந்தோஷ்** : தாயும், தாய்மொழியும் ஒன்று இதை நம்மிடம் இருந்து பிரிக்க முடியாது.

**ஆனந்த்** : உண்மைதான்.

**சம்பத்** : தாய் பேசுகின்ற மொழியே! எல்லோருக்கும் தாய்மொழி எனப்படும்.

**ஆனந்த்** : குழந்தை முதன்முதலில் பேசுகின்ற மொழி தாயின் மொழி ஆகும்.

**சந்தோஷ்** : ஒரு மனிதனுக்குத் தாய் பேசுகின்ற மொழி முதன்மையான மொழி அதுவே தாய்மொழி.

**ஆனந்த்** : தாய்மொழி எல்லோருக்கும் முதன்மையானது. ஏனென்றால் முதலில் பேசுகின்ற மொழி எளிதில் புரிந்து கொள்கிற மொழி எளிதில் கல்வி கற்க உதவுகின்ற மொழியே தாய்மொழி அதுவே முதன்மையானதாகும்.

**சந்தோஷ்** : நன்றி, வணக்கம்.

**2. 'காலத்தை வென்ற மொழி' என்னும் தலைப்பில் கவிதை படைக்க.**

('காலத்தை வென்ற மொழி' நம் தாய்மொழி தமிழ் மொழியே. இதனை வளர்த்ததும் வளர்ந்ததும் நம்நாடே! நம் தமிழ்மொழியே இதனை மையமாக வைத்து ஒரு பாடலை இங்கு கண்டு கேட்டு உண்டு மகிழ்வோம். இன்பத் தேனை அள்ளிப் பருகுவோம்.)

தமிழினம்! செந்தமிழைத் தழைக்க வைப்பது நம்மினமே!
    தமிழினமே! வந்தாரை வாழ வைக்கும் தங்கத் தமிழ்நாடு!
முதல் மனிதன் தோன்றிய இடம்
    நம் குமரிக் கண்டமே! அவன் பேசிய
அமுத மொழி செந்தமிழே!
    தெலுங்கு மலையாளம் கன்னடம்
எனும் சேய்க்குத் தாயாக இருந்த மொழி
    நம் தமிழல்லவா! தமிழை வளர்ப்பது தமிழர்
தம் கடமையல்லவா! இயல் இசை நாடகம்
    எனும் முத்தமிழை வளர்த்த நாடு நம்தாய்
நாடல்லவா! நம் தமிழ் நாடல்லவா!
    தமிழர் தம் வாழ்வியலுக்கு அகம் புறம் என

இயல் 1



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



வகுத்தவன் நம் தமிழனல்லவா! அவனை வளர்த்த
பெருமை நம் தாய் நாடல்லவா! நம் தமிழ்
நாடல்லவா! எட்டுத் தொகை பத்துப்பாட்டு
நம் தமிழ் இலக்கியமே! அகத்தியம் தொல்காப்பியம்
நம் தமிழிலக்கணமே! இதனை வகுத்துப்பகுத்துக்
கொடுத்தவன் தமிழினமே! அவனை வாழ
வைத்தது நம் தாய்நாடே! நம் தமிழ்நாடே!
உயர் சிந்தனை முகிழ்த்தது நம் தமிழினமே! உயர்
சிந்தனையாளர் வாழ்ந்தது நம் தாய்நாடே! நம் தமிழ்நாடே!
யாதும் ஊரே யாவரும் கேளிர்! எனும் ஒருமைப்பாட்டை
விதைவிதைத்தவன் நம் தமிழனே! அவனை வாழ
வைத்தது நம் தாய்நாடே! நம் தமிழ்நாடே!

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. விதைத்தவர் என்பதன் இலக்கணக்குறிப்பு** காலாண்டுத் தேர்வு 2019

அ) உரிச்சொல் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

**விடை: ஆ) வினையாலணையும் பெயர்**

**2. "கபாடபுரங்களைக் காவுகொண்டது எதனால்?**

அ) கடல் அலை ஆ) கடல் சீற்றம்
இ) கடல் உள்ளீர்ப்பு ஈ) பெரும் மழை

**விடை: ஆ) கடல் சீற்றம்**

### குறுவினா

**1. புதுக்கவிதை – விளக்கம் தருக.**

(i) மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனத்தில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.

(ii) இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

### சிறுவினா

**1. கவிஞர் சு.வில்வரத்தினம் – குறிப்பு எழுதுக.**

(i) சு.வி. என்ற பெயரால் அறியப்படும் கவிஞர் சு. வில்வரத்தினம் 1950 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர்.

(ii) இவருடைய கவிதைகள் மொத்தமாக 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தலைப்பில் 2001 இல் வெளியானது. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்டவர். தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார்.

(iii) தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் 'நாட்டுப்பற்றாளர் விருது' வழங்கி சிறப்பிக்கப்பட்டார். **அகங்களும் முகங்களும், காற்று வெளிக் கிராமம், காலத்துயர், நெற்றி மண், உயிர்த்தெழும் காலத்துக்காக, வாசிகம்** ஆகிய கவிதைத் தொகுதி நூல்களை இயற்றியுள்ளார். சு.வில்வரத்தினம் அவர்கள் 9.12.2006 இல் கொழும்பில் இயற்கை எய்தினார்.

☆☆☆





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore

இயல் 1 என்னுயிர் என்பேன் - மொழி

# பேச்சுமொழியும் கவிதை மொழியும்

- இந்திரன் உரைநடை உலகம்

**ஆசிரியர் குறிப்பு :**

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர். கவிஞர், மொழிபெயர்ப்பாளர். ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் "**பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்**" என்னும் நூலின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின் விருது** பெற்றுள்ளார். **முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள்** உள்ளிட்ட கவிதை நூல்களையும் **தமிழ் அழகியல், நவீன ஓவியம்** உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். **வெளிச்சம் நுண்கலை** ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள் :**

- வால்ட்விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ.ஸ்ரீராம்
- பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.** காலாண்டுத் தேர்வு 2018

| | | |
|---|---|---|
| அ) | அ. முத்துலிங்கம் | – யுகத்தின் பாடல் |
| ஆ) | பவணந்தி முனிவர் | – நன்னூல் |
| இ) | சு. வில்வரத்தினம் | – ஆறாம் திணை |
| ஈ) | இந்திரன் | – பேச்சுமொழியும் கவிதை மொழியும் |

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ **விடை: iii) ஆ, ஈ**

2. **ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை: இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது**

**குறுவினா**

1. **பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

அ.மா.வி, மு.ப.இடைத்தேர்வு, காலாண்டுத் தேர்வு 2018

(i) முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

(ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



**சிறுவினா**

1. **'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

(i) என் தாய் மொழி தமிழில் பிறமொழி சொற்கள் கலவாமல் நான் பேசுவதோடு மட்டுமல்லாமல், என் உறவினர், நண்பர்களையும் தூயத் தமிழில் பேச முயற்சி மேற்கொள்வேன்.

(ii) வீறுநடை கொண்டு உலகம் முழுவதும் என் தமிழ் மொழியின் பெருமைகளைப் பறைசாற்றுவேன்.

(iii) நான் எங்கு இருந்தாலும் என் தாய்மொழி தமிழுக்கு முதல் இடம் தருவேன். தாய்மொழியை வளப்படுத்துவேன். பல உயர்ந்த தமிழ் இலக்கியங்களைப் படைத்த தமிழ் அறிஞர்களைப் பெருமைப்படுத்த என்னால் இயன்றதைச் செய்வேன்.

(iv) தமிழ் மொழியில் எண்ணற்ற நூல்கள் உருவாகவும், உலகில் சிறந்த வேற்றுமொழி படைப்புகளைத் தமிழாக்கம் செய்யவும் தமிழ் ஆட்சி மன்றக் குழுவிடம் விண்ணப்பம் செய்வேன்.

(vi) மக்களின் பெயர்கள், அங்காடிகளின் பெயர்கள், திரைப்படங்களின் பெயர்கள் போன்றவைகள் எல்லாம் தமிழ் பெயர்களாகவே இருக்க என்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன்.

2. **கூற்று – குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு**
**செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப்**
**பதிவு செய்வதாகும்.**

**கவிதை – கூண்டு திறந்தது**
**சிறகடிக்கவா?**
**இல்லை! சீட்டெடுக்க.**

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

(i) கிளி இருப்பது கூண்டில். அக்கூண்டைத் திறந்தாலும் கிளி வெளியே வருவது சிறகடித்துப் பறப்பதற்கு அல்ல. சீட்டெடுப்பதற்காகத்தான்.

(ii) இக்கவிதையில் நினைவு கூரத்தக்கத் தருணம் என்பது ஓர் அடிமையின் வாழ்க்கை முறை என்ற குறியீடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நெடுவினா**

1. **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.** அரையாண்டுத் தேர்வு 2018, ஜூன், காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020

**முன்னுரை:** கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப்பேசுகிறது இக்கட்டுரை.

**பேச்சுமொழி:**

(i) எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக்(நெறியை) கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

(ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

(iii) பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.

(iv) இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே அவர்கள் **நேரடி மொழி** எனக் கருதுகின்றனர்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



(v) பேச்சுமொழிக்கு ஒரு போதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் இருக்கிறது. மாறிக்கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா இல்லை இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் **மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.** பேச்சு மொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது, அஃது உடம்பின் மேல்தோல்போல் இயங்குகிறது.

**எழுத்துமொழி:**

(i) ஒரு திரவ நிலையில் தான் விரும்பும் வகையில் தன்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

(ii) எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு.

(iii) பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல் தோல்போல் இயங்கும். ஆனால் எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடி விடுகின்றன.

**முடிவுரை:** பேச்சுமொழி, எழுத்துமொழி இவைகள் மூலம் எவ்வாறு மொழியை வெளிப்படுத்தலாம் என்பதனை மேற்கண்ட கருத்துக்களின் மூலம் நாம் தெரிந்து கொண்டோம். எழுத்துமொழியைவிட பேச்சுமொழியே மொழியை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாக இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.



## கற்பவை கற்றபின்

1. **பாரதியின் வசனகவிதைகளுள் உங்களுக்குப் பிடித்த கவிதையை வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

| இன்பம் | |
|---|---|
| இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமை யுடைத்து<br>காற்றும் இனிது தீ இனிது<br>நீர் இனிது நிலம் இனிது<br>ஞாயிறு நன்று திங்களும் நன்று<br>வானத்துச் சுடர்க ளெல்லாம் மிக இனியன<br>மழை இனிது மின்னல் இனிது இடி இனிது<br>கடல் இனிது மலை இனிது காடு நன்று<br>ஆறுகள் இனியன<br>உலோகமும் மரமும் செடியும் கொடியும்<br>மலரும் காயும் கனியும் இனியன | பறவைகள் இனிய<br>ஊர்வனவும் நல்லன<br>விலங்குகளெல்லாம் இனியவை<br>நீர் வாழ்வனவும் நல்லன<br>மனிதர் மிகவும் இனியர்!<br>ஆண் நன்று பெண் இனிது<br>குழந்தை இன்பம்<br>இளமை இனிது முதுமை நன்று<br>உயிர் நன்று சாதல் இனிது. |

2. **கவிதை குறித்துத் தமிழ்க் கவிஞர்களின் கருத்துகளைத் திரட்டி ஒப்படைவு எழுதுக.**

**முன்னுரை :**

கவிதை குறித்துத் தமிழ்க் கவிஞர்களின் கருத்துக்களைத் திரட்டி ஒப்படைவு செய்வதே இதன் நோக்கமாகும்.

**பாரதியார் :**

எங்கோ இருப்பதாகக் கூறப்படும் இறைவனை ஏத்துவதையே தொழிலாகக் கொண்டிருந்த பழம் மரபினை மாற்றி நடமாடும் தெய்வங்களாம் மாந்தர்களை – மாந்தரின் வாழ்க்கைச் சிக்கலைப் பாடுவதே கவிதையின் பாடுபொருளாக இருக்க வேண்டும் எனப் பாதை காட்டினார்.

எளிய சிறிய கவிதைகளில் மக்களுக்குப் புரியும் வண்ணம் தம் கருத்துக்களை எடுத்து வைத்தார். அவரே தம் கவிதைகள் பற்றிச் 'சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது நவ கவிதை எந்நாளும் அழியாத மா கவிதை' என்று பொருளிலும் சுவையிலும் புரட்சி செய்யும் தம் கவிதைப் படைப்புக்களைப் பாராட்டுகிறார். புதுக்கவிதை தோன்ற வழி வகுத்தவர் பாரதியே. 'பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி' எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாரதியைப் போற்றிப் பாடுகிறார்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



**பாரதிதாசன் :**

(i) **இவர் பயன்படுத்திய பாடல் வகைகளாவன:** அகவல் எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், சிந்து, கண்ணி, கலிவெண்பா, நொண்டிச்சிந்து, கும்மி முதலியன.

(ii) **இவர் பாடிய பொருள்கள்:** தமிழ்மொழி, இயற்கை, சீர்திருத்தம், இல்லறமாண்பு, பொதுவுடைமை, அரண்மனை, சமத்துவம் முதலியன இவருடைய பாடல்கள் உரைநடை போல மிக எளிதில் புரிவன. இலக்கிய வகைகள், தனித்த தன்னுணர்ச்சிப் பாக்கள், குறுங்காப்பியம், நாடகம், சிறிய கதைப் பாடல்கள், உரைநூல் போன்றன.

**நாமக்கல் கவிஞர் :**

(i) நாமக்கல்லார் காந்தியக் கவிஞர்.

(ii) "திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்றார் இராசாசி.

(iii) "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" எனப் பாடினார்.

(iv) "மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை... **– அவனும் அவளும்**

**சுரதா :**

தடை நடையே அவர் எழுத்தில் இல்லை.
வாழைத் தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு.
படுத்திருக்கும் வினாக்குறி போல் மீசை வைத்த பாண்டியர்கள்.
இவை சுரதாவின் உவமைகளுக்கு எடுத்துக்காட்டு.

**முடிவுரை :** தம் கவிதையால் தமிழ் அன்னைக்குப் புகழ்மாலைச் சூட்டி மகிழ்ந்தனர் தமிழ்க் கவிஞர்கள்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

1. **வால்ட் விட்மன் எந்த நாட்டைச் சார்ந்தவர்?** [மு.ப.இடைத்தேர்வு 2018]

அ) பிரான்சு ஆ) சிலி
இ) அமெரிக்கா ஈ) இத்தாலி **விடை: இ) அமெரிக்கா**

2. **'புல்லின் இதழ்கள்' நூலின் ஆசிரியர்?** [ஜூன் 2019]

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே
இ) பாப்லோ நெரூடா ஈ) இந்திரன் **விடை: அ) வால்ட் விட்மன்**

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **பேச்சுமொழியை இவ்வாறு அழைப்பர்**

அ) எழுத்து மொழி ஆ) நேரடி மொழி
இ) கவிதை ஈ) திராவிட மொழி **விடை: ஆ) நேரடி மொழி**

2. **கவிதையினை, 'இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை' என்றும் கூறியவர்** [மார்ச் 2020]

அ) பாரதியார் ஆ) இந்திரன்
இ) பாரதிதாசன் ஈ) சுரதா **விடை: அ) பாரதியார்**

3. **'மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன எனக் கூறியவர்**

அ) எர்னஸ்ட் காசிரர் ஆ) பாரதியார்
இ) இந்திரன் ஈ) வால்ட் விட்மன் **விடை: அ) எர்னஸ்ட் காசிரர்**





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



4. **எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி .................. மிக அருகில் உள்ளது.**

அ) கேட்பதற்கு ஆ) பேசுவதற்கு
இ) உணர்ச்சிக்கு ஈ) புரிதலுக்கு **விடை: இ) உணர்ச்சிக்கு**

5. **பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் ............... போல் இயங்குகிறது.**

அ) கண் ஆ) உயிர்
இ) இதயம் ஈ) மேல் தோல் **விடை: ஈ) மேல் தோல்**

6. **புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்**

அ) மல்லார் மே ஆ) பாப்லோ நெரூடா
இ) வால்ட் விட்மன் ஈ) ரவி வர்மா **விடை: இ) வால்ட் விட்மன்**

7. **ஸ்டெஃபான் மல்லார் மே எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

அ) அமெரிக்கா ஆ) பிரான்சு இ) இத்தாலி ஈ) சிலி **விடை: ஆ) பிரான்சு**

8. **குறியீட்டுக் கவிதைகள் என்பது**

அ) இயற்கையைப் பதிவு செய்வது
ஆ) பொருளைப் பதிவு செய்வது
இ) நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வது.
ஈ) குறியீடுகளை பதிவு செய்வது **விடை: இ) நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வது**

9. **லத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர்**

அ) மல்லார் மே ஆ) பாப்லோ நெரூடா
இ) வால்ட் விட்மன் ஈ) நோரா லாங்கே **விடை: ஆ) பாப்லோ நெரூடா**

10. **தன்னுடைய கவிதைகளுக்காக 1971-ஆம் ஆண்டு இலக்கியத்திற்கன நோபல் பரிசு பெற்றவர்**

அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன்
இ) பாப்லோ நெரூடா ஈ) மல்லார்மே **விடை: இ) பாப்லோ நெரூடா**

11. **இந்திரன் நடத்திய இதழ்கள்**

அ) வெளிச்சம், நுண்கலை ஆ) சுதேசிமித்திரன், சக்ரவர்த்தினி
இ) குயில் ஈ) நவீன ஓவியம் **விடை: அ) வெளிச்சம், நுண்கலை**

12. **'பறவைகள் ஒருவேளை தூங்கப்போயிருக்கலாம்' என்னும் நூலை எழுதியவர்**

அ) வால்ட் விட்மன் ஆ) மனோரமா பிஸ்வாஸ்
இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) வெ. ஸ்ரீராம் **விடை: அ) மனோரமா பிஸ்வாஸ்**

13. **மொழி ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்று கூறியவர்**

அ) ஆற்றூர் ரவிவர்மா ஆ) ரவிவர்மன்
இ) வால்ட் விட்மன் ஈ) இந்திரன் **விடை: அ) ஆற்றூர் ரவிவர்மா**

## குறுவினா

1. **இந்திரனின் கவிதைத் தொகுப்பு நூல்கள் யாவை?**
முப்படை நகரம், சாம்பல் வார்த்தைகள் போன்றன இந்திரனின் கவிதைத் தொகுப்பு நூல்கள் ஆகும்.

2. **வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதை நூல் எது?**
வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதை நூல் '**புல்லின் இதழ்கள்**'.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



3. **எர்னஸ்ட் காசிரர் கூற்றினை விளக்குக.**

மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன என்கிறார் எர்னஸ்ட் காசிரர்.

4. **கவிதை என்பது எது?**

கவிதை என்பது ஒரு பொருளன்று. அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு. எனவே, கவிதை என்பதே மொழிதான். கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

5. **இந்திரனின் கட்டுரை நூல்களை எழுதுக.**

**இந்திரனின் கட்டுரை நூல்கள் :**

(i) தமிழ் அழகியல்

(ii) நவீன ஓவியம் போன்றனவாகும்.

6. **இராசேந்திரன் அவர்களுக்கு எவ்வருடம், எந்நூலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது?**

(i) **வருடம் :** 2011

(ii) **நூலின் பெயர் :** 'பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்.'

7. **நேரடி மொழி குறித்து இந்திரன் கூறுவது யாது?**

(i) பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.

(ii) இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே அவர்கள் **நேரடி மொழி** எனக் கருதுகின்றனர்.

**சிறுவினா**

1. **மகாகவி பாரதி பார்வையில் கவிதை எவ்வாறு இருக்க வேண்டும்?**

(i) கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, 'இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவது தான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை' என்றும் கூறினார் மகாகவி பாரதி.

(ii) கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்துமொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதனைப் பற்றி அறிந்து கொள்ள பாரதியாரின் கவிதைகளை வாசிக்க வேண்டும். அதில் உள்ள உட்கருத்துக்களை நாம் நேசிக்க வேண்டும்.

2. **வாளினும் வலிமை உடையது மொழி – விளக்குக.**

(i) மொழிவாரியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது எனக்கொரு அதிகாரம் வந்து விடுவதை உணர்கிறேன்.

(ii) குழந்தையாக இருந்தபோது "அம்மா, அம்மா" என்று அழைப்பேன். வேலையில் மூழ்கிய அம்மா, என்னைக் கவனிக்காத போது திடீரென்று அவளது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன். அவள் திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறாள்.

(iii) என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

(iv) உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம் உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திரும்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன்.

(v) இதுமட்டுமின்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

என்னுயிர் என்பேன்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



## நெடுவினா

1. **மூன்று வகையான கவிஞர்கள் பற்றி இந்திரன் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக. (அல்லது) பெருங்கவிஞர்களின் வாய்மொழி குறித்து ஆசிரியர் இந்திரன் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.**

**ஆசிரியர் இந்திரன் கூறும் மூன்று வகையான கவிஞர்கள்:**

**முதல் வகையினர்:**

வால்ட். விட்மனைப் போன்றவர்கள் இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானது இல்லை. எழுதப்படுகின்ற எழுத்துக்கள் சொற்களில் கரைந்து போவதைப் போல சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.

கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச் சுருளைப் போல் அல்லாமல் பேச்சுமொழிக்கேற்றாற் போல் தளர்வோடு இருக்கும். பல நேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன் அவ்வப்போது நடப்பதற்குத் தாவி வருவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும்.

**இரண்டாம் வகையினர்:**

கவிஞர் 'மல்லார்மே' போன்றவர்கள் இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. எதிரில் ஒருவரை வைத்துக் கொண்டு பேசுவதைப்போல் இல்லாமல் தனிமையில் தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்வதைப் போல் இருக்கும். தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்வதாகும். இவர்களின் கவிதைகளைக் குறியீட்டுக் கவிதைகள் என்று கூறலாம்.

**மூன்றாம் வகையினர்:**

ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய **'பாப்லோ நெரூடா'** போன்றவர்கள் கவிதை ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. இவர்களது கவிதை வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறதே தவிர வாழ்க்கை வடிவத்தை வெற்றி கொள்வது இல்லை. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலத் தோன்றினாலும் எதையும் சுட்டாமல் முடிந்து விடுவதைப் போன்றதாக உள்ளது.

2. **என்னை விளக்கிய மொழி என்று ஆசிரியர் இந்திரன் உணர்த்தும் செய்திகள் யாவை?**

(i) மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழைஇழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்துக் கொடுத்தது மொழி. இதன் மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறக்கலாயின.

(ii) மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கிற போதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன். அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன்.

(iii) பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது. அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

(iv) மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின்மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன். என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

(v) ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது. இந்தத் திட நிலையை அடைந்தமொழி அது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது.

☆☆☆




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.** ஜூன் 2019, காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020

அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்

ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

இ) கடல் + அலை – உயிர் + மெய்

ஈ) மண் + வளம் – மெய் + மெய்

**விடை: இ) கடல் + அலை – உயிர் + மெய்**

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**




அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர். (3)

**விடை:** அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர். (10)

**விடை:** கல்யாண சுந்தரனார்

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர். (6)

**விடை:** பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர். (2)

**விடை:** ஜீவா.

**3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** ஜூன் 2019

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**விடை:** காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது. அரையாண்டுத் தேர்வு 2019

**விடை:** முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

**விடை:** காலத்திற்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

**விடை:** ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

உ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

**விடை:** தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.

**4. வினாக்கள்**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?** மு.ப.இடைத்தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2019

(i) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் – 22.

(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.

(iii) மெய்களில் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாக வரும்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.** முத.இடைத்தேர்வு 2018

(i) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் - 24.
(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.
(iii) மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொன்று சொல்லின் இறுதியில் வரும்.
(iv) குற்றியலுகரம் ஒன்று.

**எ.கா. :** பல, பலா, கரி, தீ, கொடு, பூ, சே, நகை, நொ, கோ, கௌ, உரிஞ், கண், வெறிந், அறம், பொன், தாய், பார், கால், தெவ், வாழ், கேள்.

**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.** மார்ச் 2020

(i) **உயிரீறு:** நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும்.

**எ.கா. :** மணி[ண் + இ] + மாலை = மணிமாலை. - உயிரீறு.

(ii) **மெய்யீறு:** நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

**எ.கா. :** பொன் + வண்டு = பொன்வண்டு - மெய்யீறு.

**ஈ) உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

(i) **உயிர்முதல்:** வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும்.
**எ.கா. :** வாழை + இலை = வாழையிலை - உயிர்முதல்.

(ii) **மெய்முதல்:** வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்முதல் எனப்படும்.
**எ.கா. :** தமிழ் + நிலம் (ந் + இ) = தமிழ் நிலம் - மெய்ம் முதல்.

**உ) குரங்குக்குட்டி - புணர்ச்சியை விளக்குக.**

(i) குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி
(ii) மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகும் எனும் விதிப்படி 'க்' மிகுந்தது. குரங்கு + க் + குட்டி = குரங்குக்குட்டி என்றானது.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

**1. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**விடை: அ) அன்னம், கிண்ணம்**

**குறுவினா**

**1. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

| | | | |
|---|---|---|---|
| (i) | உயிரெழுத்து | = உயிர் + எழுத்து | - நிலைமொழியின் ஈற்றெழுத்து - ர் - மெய்யீறு |
| (ii) | பன்னிரண்டு | = பத்து + இரண்டு | - நிலைமொழியின் ஈற்றெழுத்து - (து - த் + உ) உ- உயிரீறு |
| (iii) | திருக்குறள் | = திரு + குறள் | - நிலைமொழியின் ஈற்றெழுத்து - (ரு - ர் + உ) உ- உயிரீறு |
| (iv) | நாலடியார் | = நான்கு + அடியார் | - நிலைமொழியின் ஈற்றெழுத்து - (கு - க் + உ) உ- உயிரீறு. |

**சிறுவினா**

**1. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழி முதல் எழுத்துகள் – 22 :** உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும். மெய்யெழுத்துகள் மெய்வடிவிலேயே சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன. மெய்களில் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் சொல்லின் முதலில் வரும். (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்).




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



எ.கா. :

(i) அம்மா, ஆடு, இலை, ஈட்டி, உடை, ஊர், எடு, ஏர், ஐயம், ஒன்று, ஓணான், ஔவை.

(ii) கண்ணன், சந்தம், தண்ணீர், நண்டு, படை, மலை, யவனர், ஞமலி, ஙனம் (விதம்)

**மொழி இறுதி எழுத்துகள் – 24 :** உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும். மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லின் இறுதியில் வரும். பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக் கொள்வர்.

எ.கா. :

(i) பல, வினா, கரி, தீ, கடு, பூ, மேலே தை, நொ, போ, கௌ – உயிர்மெய்யோடு கூடி இறுதியில் வந்தது.

(ii) உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள் – மெய்யெழுத்துக்கள் இறுதியில் வந்தன. எஃகு, இருபஃது – குற்றியலுகரம் இறுதியில் வந்தது.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. கலை + அறிவு புணரும் புணர்ச்சி வகை ............ .** செப். 2020

அ) குற்றியலுகரப் புணர்ச்சி ஆ) உடம்படு மெய்ப்புணர்ச்சி

இ) முற்றியலுகரப் புணர்ச்சி ஈ) பண்புப் பெயர்ப்புணர்ச்சி

**விடை: ஆ) உடம்படு மெய்ப்புணர்ச்சி**

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. சொல்லில் முதலில் வரும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?**

அ) 24 ஆ) 22 இ) 26 ஈ) 12 **விடை: ஆ) 22**

**2. சொல்லில் இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம்**

அ) 24 ஆ) 22 இ) 26 ஈ) 10 **விடை: அ) 24**

**3. தமிழ் + அன்னை – சொற்புணர்ச்சியில் எழுத்துகள் சந்திக்கும் முறை ............** மு.ப.இடைத்தேர்வு 2018

அ) உயிர் + உயிர் ஆ) மெய் + மெய்

இ) மெய் + உயிர் ஈ) உயிர் + மெய் **விடை: இ) மெய் + உயிர்**

**4. நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் ............. என்பர்.**

அ) நிலைமொழி ஆ) மெய்யீறு

இ) உயிரிறு ஈ) புணர்ச்சி **விடை: ஈ) புணர்ச்சி**

**5. நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது ..............**

அ) உயிரிறு ஆ) மெய்யீறு

இ) புணர்ச்சி ஈ) வருமொழி **விடை: ஆ) மெய்யீறு**

**6. இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ............. சார்ந்தே வருகின்றன.**

அ) பெயர், வினை ஆ) நிலைமொழி

இ) உயிர், மெய் ஈ) சுட்டு, வினா **விடை: அ) பெயர், வினை**

**7. சார்பெழுத்துகளுள் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வராதது ...............**

அ) உயிர் ஆ) உயிர்மெய்

இ) மெய் ஈ) ஆய்தம் **விடை: ஈ) ஆய்தம்**

என்னுயிர் என்பேன்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



8. **தவறான இணையைத் தேர்க.**

அ) மலை + அருவி = உயிர் + உயிர்
ஆ) தமிழ் + அன்னை = மெய் + உயிர்
இ) தேன் + மழை = உயிர் + மெய்
ஈ) தென்னை + மரம் = உயிர் + மெய்

**விடை: இ) தேன் + மழை = உயிர் + மெய்**

## குறுவினா

1. **எழுத்துக்களின் அடிப்படையில் புணர்ச்சி வகைகள் யாவை?**

சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறையை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

| வ. எண் | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா | சந்திப்பு |
|---|---|---|---|
| 1. | உயிர் + உயிர் | மலை + அருவி | ஐ + அ |
| 2. | மெய் + உயிர் | தமிழ் + அன்னை | ழ் + அ |
| 3. | உயிர் + மெய் | தென்னை + மரம் | ஐ + ம் |
| 4. | மெய் + மெய் | தேன் + மழை | ன் + ம் |

## சிறுவினா

1. **'ங்' என்னும் மெய்யெழுத்து எங்கு, எவ்வாறு பயன்படுகிறது?**

(i) 'ங்' என்னும் மெய்யெழுத்து 'விதம்' எனப் பொருள் தரும். 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராமல் அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்தே வரும்.

(ii) எ.கா. அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்பன.

(iii) இவற்றில் 'உங்ஙனம்' என்னும் சொல் தற்போது வழக்கில் இல்லை. ஆனால் தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

2. **குற்றியலுகரத்தின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.**

(i) சார்பெழுத்துகளுள் ஆய்தம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது.

(ii) குற்றியலுகரமும் (நுந்தை தவிர) குற்றியலிகரமும் இக்காலத்தில் சொல்லின் முதலில் வாரா.

(iii) ஆயினும், குற்றியலுகரத்தின் ஆறு வகைகளும் சொல்லின் இறுதியில் வருகின்றன.

(iv) குற்றியலுகர ஈற்றுடன் வரும் நிலைமொழி, குற்றியலுகர ஈறு அல்லது குற்றியலுகர நிலைமொழி எனப்படும்.

| | |
|---|---|
| வீ டு + இல்லை = வீடில்லை | நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| முர டு + காளை = முரட்டுக்காளை | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| அச் சு + பலகை = அச்சுப் பலகை | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| பஞ் சு + பொதி = பஞ்சுப்பொதி | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார் பு + கூடு = மார்புக்கூடு | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃ கு + கம்பி = எஃகுக்கம்பி | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |

3. **சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி வகைகள் யாவை?**

(i) இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். இவற்றின் இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வருகின்றன. இவ்விரு சொற்களும் நிலைமொழியாகவும், வருமொழியாகவும் வந்தாலும் அவற்றின் புணர்ச்சி, எழுத்துகளின் புணர்ச்சியே ஆகும்.

(ii) புணர்ச்சி என்பது எழுத்துகளின் சந்திப்பாகவும் சொற்களின் சந்திப்பாகவும் அமைகிறது. எனவே, எழுத்துகளும் சொற்களும், ஒலிக்கூறுகளாகவும் பொருள் கூறுகளாகவும் சந்திக்கும் நிகழ்வே புணர்ச்சி ஆகும்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



| வ. எண் | நிலைமொழி வருமொழி | எ.கா |
|---|---|---|
| 1. | பெயர் + பெயர் | கனி + சாறு |
| 2. | பெயர் + வினை | தமிழ் + படி |
| 3. | வினை + வினை | நடந்து + செல் |
| 4. | வினை + பெயர் | படித்த + நூல் |

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**


மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் (1815 – 1876)

தமிழ் இலக்கிய வரலாற்றில், 'புலமைக் கதிரவன்' எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள **அதவத்தூர்** என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய **சேக்கிழார் பிள்ளைத்தமிழ்** என்ற நூல் அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

**1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் 'புலமைக் கதிரவன்' என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**

புலமைக் கதிரவன் – உருவகத்தொடர்

**2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

(i) புலமைக் கதிரவன் – உருவகத்தொடர்

(ii) தேனுண்ணும் வண்டு போல் – உவமைத்தொடர்

**3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் – விடைக்கேற்ற வினாவை அமைக்க.** அ.மா.வி 2018

தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

**4. பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக்கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.**

(i) புராணங்கள்

(ii) மகா வித்துவான்

(iii) யமக அந்தாதி

(iv) திரிபந்தாதி

(v) கலம்பகம்

**5. விளங்கினார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

விளங்கினார் = விளங்கு + இன் + ஆர்

விளங்கு – பகுதி

இன் – இறந்தகால இடைநிலை

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



## தமிழாக்கம் தருக

1. The Pen is mightier than the Sword. காலாண்டுத் தேர்வு 2018, ஜூன் 2019

   **விடை:** கத்தி முனையைவிட பேனாமுனை கூர்மையானது.

2. Winners don't do different things, they do things differently.

   **விடை:** வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்யாமல், செய்வதையே வித்தியாசமாக செய்ய முயற்சிப்பார்கள்.

3. A picture is worth a thousand words. ஜூன் 2019

   **விடை:** ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. Work while you work and play while you play. மார்ச், காலாண்டுத் தேர்வு 2019

   **விடை:** வேலை செய்யும்போது வேலையில் கவனம் வை! விளையாடும்போது விளையாட்டில் கவனம் வை!

5. Knowledge rules the world. காலாண்டுத் தேர்வு 2019

   **விடை:** அறிவே உலகை ஆள்கிறது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| வாடகை | குடிக்கூலி | நிச்சயம் | உறுதி |
| சம்பளம் | ஊதியம் | தேசம் | நாடு |
| விசா | நுழைவிசைவு, நுழைவாணை | பத்திரிகை | செய்தித்தாள் |
| ராச்சியம் | ஆட்சி | சொந்தம் | உரியது(தனக்குரியது) |
| மாதம் | திங்கள் | உத்திரவாதம் | பொறுப்பு, பிணை |
| ஞாபகம் | நினைவு | வித்தியாசம் | வேறுபாடு |
| பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு | கோரிக்கை | வேண்டுகோள் |
| சரித்திரம் | வரலாறு | சமீபம் | அண்மை |
| போலீஸ் | காவலர் | சந்தோஷம் அரையாண்டுத் தேர்வு 2019 | மகிழ்ச்சி |
| வருடம் | ஆண்டு | உற்சாகம் | மன எழுச்சி, ஊக்கம் |
| கம்பெனி | குழுமம் | யுகம் | காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று |
| முக்கியத்துவம் | இன்றியமையாமை | தருணம் | தக்க சமயம் |

**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

நிகழ்ச்சி நிரல்

"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)

| நேரம் : 2.30 பிற்பகல் | இடம்: அ.மே.நி. பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை– மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" | |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



**விடை:**

## நிகழ்ச்சி

அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை வேளச்சேரியில் 'அரியன கேள் புதியன செய்' என்ற தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி 21.06.2021 திங்கள் கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்குத் துவங்கியது. மாணவ – மாணவியர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர். மாணவர் தமிழ்ச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்தி அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. கமலன் தலைமையுரை நிகழ்த்தினார். 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்ற தலைப்பில் கவிஞர் வாணி சிறப்புரையாற்றினார். விழாவைச் சிறப்பித்தவர்க்கு நன்றியுரையை மாணவர் குமரன் கூறினார். அனைவரும் நாட்டுப்பண்ணைச் சேர்ந்து பாட கூட்டம் நிறைவு பெற்றது.

**அனுப்புநர்:**

இரா. பார்த்த சாரதி,
தலைவர், மாணவர் மன்றம்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
வேளச்சேரி,
சென்னை – 42.

**பெறுநர்:**

உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
தினத்தந்தி நாளிதழ்,
எழும்பூர், சென்னை – 7

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** நாளிதழில் செய்தி இடம் பெறவேண்டி விண்ணப்பித்தல்.

வணக்கம்.

எங்கள் அரசு மேனிலைப் பள்ளியில் "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" எனும் தலைப்பில் பேச வருகை தரும் அன்பு உள்ளங்களை தங்கள் தினத்தந்தி நாளிதழ் வாயிலாக வரவேற்பு நடத்தவும் அந்த நிகழ்ச்சிகளை நாளிதழ் வாயிலாக தெரிவிக்கவும் விரும்புகிறேன். அருள் கூர்ந்து எங்கள் பள்ளி சார்பில் நடத்தும் நிகழ்ச்சி நிரலினைத் தங்கள் நாளிதழில் செய்தியாக இடம்பெற ஆவன செய்யுமாறு எங்கள் பள்ளி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

**இடம் :** சென்னை, இப்படிக்கு,
**நாள் :** 15.06.2021. இரா. பார்த்த சாரதி.

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்று பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

தமிழ் என்ற சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள்: இனிமை, பண்பாடு, அகப்பொருள், அழகு, கலைப்புலமை, மென்மை போன்றனவாகும்.

என்னுயிர் என்பேன்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

his is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstore



**2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

பத்தியில் உள்ள அளபெடைகள்

(i) அதூஉம் – இசைநிறையளபெடை / செய்யுளிசை அளபெடை

(ii) தழீஇய – சொல்லிசையளபெடை.

**3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

தமிழ் என்றவுடன் நம் மனதில் தோன்றுவது. தமிழின் இனிமை, எளிமை, புதுமை. தமிழ்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்கள்.

**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் 'தமிழ்மாலை'.

**5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

தமிழின் பெருமை.

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



குழாயில் சொட்டும் நீரைக் குடிக்கும் பறவையின் பரிதாப நிலை: விலங்கினங்களின் நீராதாரமான ஏரி, குளங்களில் நீர் இல்லாமையே இதற்குக் காரணம். மக்கள் தங்கள் தேவைகளுக்கு மரங்களை வெட்டினர். மழை பருவநிலை மாறி பெய்கிறது. இதனால் உயிரினங்களுக்குத் தேவையான நீரும் இல்லை. பறவைகள் தங்குவதற்கு மரங்கள் இல்லை. நீர் நிலைகளில் நீர் இல்லை. வயல்களில் பயிர்கள் இல்லை. அதனால் பறவைகளின் இரையான புழு பூச்சிகளும் இல்லை. நீரின்றி மக்களும் அவதிப்படுகின்றனர். உயிரினங்களும் அவதிக்குள்ளாகிவிட்டன. இதன் வெளிப்பாடே இப்புகைப்படம்.

**2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

**(எ.கா.)**

**ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.** காலாண்டுத் தேர்வு 2019

அ) மயில் ஓர் அழகான பறவை

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) **பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.**

அ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

ஆ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

ii) **நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை** மார்ச் 2020

அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

iii) **பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.**

அ) பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.

ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



iv) **நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?** ஜூன் 2019

அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?

ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை தெரியுமா?

v) **கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.** அரையாண்டுத் தேர்வு 2019

அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

3. **வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

**(எ.கா.)**

**அ) வா**

வா* – வேர்ச்சொல்

அருணா வீட்டுக்கு **வந்தாள். (வினைமுற்று)**

அங்கு **வந்த** பேருந்தில் அனைவரும் ஏறினர். **(பெயரெச்சம்)**

கருணாகாரன் மேடையில் **வந்து** நின்றார். **(வினையெச்சம்)**

என்னைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர். **(வினையாலணையும் பெயர்)**

**ஆ) பேசு** – வேர்ச்சொல்

கண்ணன் நன்றாகப் **பேசினான். (வினைமுற்று)**

மேடையில் **பேசிய** கண்ணனை அனைவரும் பாராட்டினர். **(பெயரெச்சம்)**

குழந்தை நினைத்தவற்றையெல்லாம் **பேசி** முடித்தது. **(வினையெச்சம்)**

“வானொலியில் **பேசியவர்** யார்?” என்று அண்ணன் தம்பியிடம் கேட்டான். **(வினையாலணையும் பெயர்)**

**இ) தா** – வேர்ச்சொல்

வேல்விழி கயல்விழிக்குப் புத்தகம் **தந்தாள். (வினைமுற்று)**

வேல்விழி **தந்த** புத்தகம் கயல்விழிக்குப் பிடித்திருந்தது **(பெயரெச்சம்)**

தலைமையாசிரியர் சான்றிதழ்களைத் **தந்து** முடித்தார். **(வினையெச்சம்)**

தானமாகப் பொருட்களைத் **தந்தவர்** மகிழ்ந்தார். **(வினையாலணையும் பெயர்)**

**ஈ) ஓடு** – வேர்ச்சொல்

மாணவர்கள் வேகமாக **ஓடினர். (வினைமுற்று)**

வேகமாக **ஓடிய** மாணவன் வெற்றி பெற்றான். **(பெயரெச்சம்)**

குமரன் வேகமாக **ஓடி** விழுந்தான். **(வினையெச்சம்)**

மெதுவாக **ஓடியவர்** தோற்றார். **(வினையாலணையும் பெயர்)** அரையாண்டுத் தேர்வு 2018

**உ) பாடு** – வேர்ச்சொல் காலாண்டுத் தேர்வு 2019

கீதா பாட்டுப் **பாடினாள். (வினைமுற்று)**

பாட்டுப் **பாடிய** கீதா நடனமும் ஆடினாள். **(பெயரெச்சம்)**

கீதா பாட்டுப் **பாடி** முடித்தாள். **(வினையெச்சம்)**

வகுப்பில் **பாடியவள்** அனைவராலும் பாராட்டப்பட்டாள். **(வினையாலணையும் பெயர்)**

### செய்து கற்போம்

1. **தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் செய்திகள், கவிதைகள், படங்களைச் சேகரித்து எட்டுப் பக்க அளவில் தொகுப்பேடு உருவாக்குக.**

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் செய்திகள்:**

(i) உலக மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் எனத் தமிழ் வரலாறு எனும் நூலில் மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இயல்பாகத் தோன்றிய இயன்மொழியான நம் தமிழ் மொழிக்குப் பதினாறு பண்புகள் உள்ளன.

(ii) நம் தமிழ்மொழி பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் பாவாணர். தொன்மை, முன்மை, எளிமை, ஒன்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை – இவை பாவாணர் கூறிய செவ்வியல் பண்புகள் ஆகும்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



(iii) உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழியில் மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர்.

(iv) பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் எனும் நூல்வழி அறியலாம். அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ். அக்கால மக்கள் வீரவாழ்க்கையும் கொடைச் சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக திகழ்வது பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகும்.

(v) தமிழில் அறநூல்கள் ஏராளமாக உள்ளன. தேடினாலும் திருக்குறள் போல வேறு மொழிகளில் அறநூலுண்டோ? மனதை நெகிழ்வித்து உருக்குவதற்குத் தேவார திருவாசகம் தமிழில் வைரமாக ஒளிர்கின்றன. வேற்றுமொழிகளில் இல்லாத அளவிற்குத் தொல்காப்பியம் தொடங்கி இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்ந்திருக்கின்றன. 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'– என்று 'பிங்கலந்தை' என்னும் நிகண்டு நூல் கூறுகிறது. 'தமிழ்' என்னும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும். தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும்.

(vi) தமிழில் ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளையும் சிறப்பெழுத்துகள் என நற்றமிழ் இலக்கணம் எனும் நூலில் டாக்டர் சொ. பரமசிவம் குறிப்பிடுகிறார். ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளுள் 'ழ' வைத் தவிர்த்து பிற நான்கும் பிற திராவிட மொழிகளிலும் உலக மொழிகளிலும் காணப்படுகின்றன. 'ழ' கரம் தமிழைத் தவிர்த்து திராவிட மொழியான மலையாள மொழியிலும் உலக மொழிகளுள் பிரெஞ்சு மொழியிலும் மட்டுமே உள்ளது. தமிழ்மொழி இன்றளவும் பேச்சளவிலும் ஏட்டளவிலும் உள்ள கன்னித் தமிழாக அழியாமல் இருக்கின்றது. தமிழின் இனிமையைப் பாராட்டாத இலக்கியங்களே இல்லை.

கம்பராமாயணம், 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" – பாரதியார்

(vii) "தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்" – பாரதிதாசன் தமிழின் சிறப்பை உணர்ந்த மேலை நாட்டறிஞர் டாக்டர் ஜி.யு.போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்கச் செய்தார்.

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் கவிதை :**

பைந்தமிழ் பாவலன் பாடும் பைந்தமிழே!
என்றும் இளமை மாறா செந்தமிழே!
வடிதமிழ் மதுரம் ஒழுகிய தீந்தமிழே!
தெள்ளித் தெளிக்கும் தமிழ்க் கடலே!
தெளி தமிழ் தென்னந் தமிழே!
முது சொல் புலவர் தெளித்த பசுந்தமிழே!
தெய்வத்தமிழ் மதுரம் ஒழுகும் கொழி தமிழே!
இலக்கண இலக்கியம் தந்த தமிழே!
இயல் இசை நாடகம் எனும் முத்தமிழே!
நீ வாழி! நின் புகழ் பாட வரம் தா
செந்தமிழே! மதுர கவி தீந்தமிழே!

**சொற்சுவை**

**தகப்பன் :** தந்தை என்ற பொருளில் வருவது இச்சொல். தம் அப்பன் = தமப்பன் என்ற வடிவத்திலும்தான் முதலில் இருந்தது. இவ்வடிவமே திரிந்து தகப்பன் என்றாயிற்று.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in
This is Only for Sample for Full Guide Order Online or Available at All Leading Bookstores



## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனதில் நிகழும் மாற்றங்கள் | நான் செய்ய வேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன். |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

### கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. அழகியல் – Aesthetics | 4. புலம்பெயர்தல் – Migration |
| 2. புத்தக மதிப்புரை – Book Review | 5. கலை விமர்சகர் – Art Critic |
| 3. இதழாளர் – Journalist | 6. மெய்யியலாளர் – Philosopher |

### அறிவை விரிவு செய்

1. நாடற்றவன் – அ.முத்துலிங்கம்
2. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? – அ.கி. பரந்தாமனார்
3. உயிர்த்தெழும் காலத்துக்காக – சு.வில்வரத்தினம்

☆☆☆





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

# KALVI KADAL

www.kalvikadal.in

கீழே கொடுக்கப்பட்டுள்ள நீல நிற எழுத்துக்களை தொட்டு அந்த தலைப்பிற்கு ஏற்ப பாட குறிப்புகளை பெற்றுக் கொள்ளவும்

✓ TN State Board 1th - 12th Standard Text Books 2021-22 New Edition

## GUIDES :

- 6th - 12th Standard All Publications Guides 2021-22 New Edition
- 6th Standard All Guides
- 7th Standard All Guides
- 8th Standard All Guides
- 9th Standard All Guides
- 10th Standard All Guides
- 11th Standard All Guides
- 12th Standard All Guides

- For Recent Educational Updates & News Please Visit : News.Kalvikadal.in
- For Direct Download of Study Materials Please Visit : Material.kalvikadal.in

Follow us on our Social Media

kalvi_kadal

## FULL GUIDES :

- 10th Standard All Subjects FULL Guides Free Download
- 11th Standard All Subjects FULL Guides Free Download
- 12th Standard All Subjects FULL Guides Free Download

## Question Papers :

- 10th Standard Full Portion Question Papers MEGA Collection
- 10th Standard PUBLIC EXAM Original Question Paper
- 11th Standard PUBLIC Exam Original Question Paper & Answer key
- 12th Standard PUBLIC Exam Original Question Paper & Answer key

Join Our Telegram Channel

Join our Whatsapp Group

Subscibe our Channel